DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | DVC No. 18 /2023 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | சரவணன் |
| Father's /Husband Name | : | முத்துகிருஷ்ணன் |
| Village | : | சபரி நகர் |
| Taluk | : | கும்பகோணம் |
| Age | : | 43 |
| Occupation | : | ரயில்வே கான்ட்ராக்டர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 11th day July 2025. .
Respondent R2 present. R1, R3 dispense. Complainnat presnet. Both side counsel present.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:-**

எனது முதன்மை வாக்குமூலம் பக்கம் 1, பத்தி-2ல் மனுதாரருக்கு 50 பவுன் தங்க நகைகளும், 1ம் எதிர்மனுதாருக்கு 10 பவுன் தங்க நகைகளும் மேலும் kia Seltos காரும் வேண்டும் என்று எதிர்மனுதாரர்கள் வீட்டிலிருந்து 1ம் எதிர்மனுதாரரின் தகப்பானர் கேட்டார். அவர் பெயர் எனக்கு தெரியாது. மனுதாரர் வீட்டில் மேற்படி சீர் செய்ய மறுத்து கொடுக்கவில்லை. திருமண பேச்சு வார்த்தையின்போது நான் உடனிருந்தேன். எனது நிரூபண வாக்குமூலம் பத்தி-3ல் 1ம் எதிர்மனுதாரர் வெளிநாட்டில் ஆராய்ச்சி படிப்பு படித்து கொண்டிருப்பதாகவும், மனுதாருக்கும் சிங்கப்பூர் வேலை கிடைத்துவிடும் என்று எதிர்மனுதாரர்கள் வீட்டில் சொன்னார்கள், அவர் பெயர் தெரியாது. வேலை கிடைத்தால் சிங்கப்பூர் அழைத்து செல்வதாக மாப்பிள்ளை வீட்டில் சொன்னார்கள் என்றால் சரிதான். மனுதாரருக்கு சிங்கப்பூருக்கு வேலை கிடைத்தது, 1ம் எதிர்மனுதாரர் தற்போது வரை படித்துக்கொண்டிருக்கிறார். திருமண பேச்சு வார்த்தை தவிர வேறு தனிப்பட்ட குடும்ப விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. மனுதாரர் கும்பகோணத்தில் 1ம் எதிர்மனுதாரர் தனியாக வாடகைக்கு வீடு எடுக்கும்பட்சத்தில் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக சொன்னார் என்றால் சரிதான். மனுதாரரின் முக்கிய கோரிக்கை சிங்கப்பூருக்கு அழைத்து செல்ல வேண்டும், எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு 1ம் எதிர்மனுதாரர் மட்டும் சிங்கப்பூருக்கு செல்லக்கூடாது என்று 3வது பத்தியில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பெண் வீட்டார் நிபந்தனை மனுதாரரை எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு செல்லக்கூடாது என்பதுதான் என்றால் சரிதான். மனுதாரரை எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு 1ம் எதிர்மனுதாரர் மட்டும்

சிங்கப்பூருக்கு சென்றதுதான் பிரச்சனை என்றால் சரிதான். மேற்படி கருத்து வேறுபாட்டால் மனுதாரரை மனுதாரரின் தகப்பனார் அழைத்து வந்துவிட்டார் என்றால் சரிதான். பேசியபடி திருமண சீர்வரிசை செய்தார்கள் என்றால் சரிதான். சீர் வரிசை சம்பந்தமாக பிரச்சனை இல்லை என்றால் சரிதான். மனுதாரரின் உறவினர் என்பதால் மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.
**மறு விசாரணை:** இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./-P.Rangeswari,
Judicial Magistrate No.I,
Kumbakonam.